# அனகாபுத்தூர் நகராட்சி

**<u>சென்னை – 600 070.</u>**

<u>கூட்ட எண்.43/2019</u> <u>நாள். 28.06.2019</u>

## <u>தனி அலுவலர் அவர்களின் ஜூன் 2019 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்</u>

28.6.2019ம் நாள் வெள்ளிகிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**<u>பொருள் எண். 1</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் ஜூன் 2019 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

<u>பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்</u>

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | ஜூன் 2019 | 0 | 0 | 7 | 6 | இல்லை | இல்லை |

**<u>பொருள் எண். 2</u>**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஜூன் 2019 மாதத்தின் நாட் குறிப்புகள்

**<u>அலுவலக குறிப்பு :</u>** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**<u>பொருள் எண். 3</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் உள்ள வார்டு எண்.1 முதல் 9 பிரதான தெருக்கள் சந்திப்பில் High Mast Light பொருத்தப்பட்டு எரிந்து கொண்டுள்ளது. இதில் மெற்குரி High Mast Light பொருத்தி எரிய வைக்கப்பட்டுள்ளது. இதனால் 1 எண்ணிக்கை கம்பத்தில் 2400 W மின் கட்டணம் செலவாகிறது. செலவினத்தை குறைப்பதற்கு ஏதுவாக LED Light 150 W பொருத்தி எரியவைத்தால் 900 W மின் கட்டணம் மட்டுமே செலவாகும். ஆகையால் மின் கட்டணத்தை குறைக்க ஏதுவாக 1 முதல் 9 வரை உள்ள 6 எண்ணிக்கையில் உள்ள Mini High Mast Lightல் 150W LED Light பொறுத்த ஆகும் செலவினத் தொகை ரூ.9.80 இலட்சம் ஆகும். செலவினத்தொகைக்கும், பணியினை செய்யவும் அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணியினை மேற்கொண்டால் நகராட்சிக்கு மின் கட்டண தொகை குறையும் என நகராட்சியின் சிக்கன செலவினத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியினை பொது நிதி / அரசு நிதியில் செய்யவும் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.4**

அனகாபுத்தூர் நகராட்சியில் உள்ள வார்டு எண்.10 முதல் 18 பிரதான தெருக்கள் சந்திப்பில் High Mast Light பொருத்தப்பட்டு எரிந்து கொண்டுள்ளது. இதில் மெற்குரி High Mast Light பொருத்தி எரிய வைக்கப்பட்டுள்ளது. இதனால் 1 எண்ணிக்கை கம்பத்தில் 2400 W மின் கட்டணம் செலவாகிறது. செலவினத்தை குறைப்பதற்கு ஏதுவாக LED Light 150 W பொருத்தி எரியவைத்தால் 900 W மின் கட்டணம் மட்டுமே செலவாகும். ஆகையால் மின் கட்டணத்தை குறைக்க ஏதுவாக 10 முதல் 18 வரை உள்ள 6 எண்ணிக்கையில் உள்ள Mini High Mast Light ல் 150W LED Light பொறுத்த ஆகும் செலவினத் தொகை ரூ.9.80 இலட்சம் ஆகும். செலவினத்தொகைக்கும், பணியினை செய்யவும் அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியினை மேற்கொண்டால் நகராட்சிக்கு மின் கட்டண தொகை குறையும் என நகராட்சியின் சிக்கன செலவினத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியினை பொது நிதி / அரசு நிதியில் செய்யவும் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.5**

அனகாபுத்தூர் நகராட்சிக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ், 2019ம் ஆண்டு கோடையில் குடிநீர் விநியோக பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28 அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.8408/2019/இ3 நாள்.11.06.19ன்படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு இவ்வலுவலக ந.க.எண்.626/2019/இ1 நாள்.07.06.2019ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| மாநில பேரிடர் நிவாரண நிதி 2019 | | | | |
| 1. | வார்டு எண். 1 முதல் 13 வரை இந்தியன் மார்க் ஐஐ கைபம்பு அமைத்தல் பணி | 10.00 | ஸ்ரீபாலமுருகள் போர்வெல்ஸ்<br>ஜே.சோபன் பாபு | 0.10% குறைவு<br>1.50% அதிகம் |
| 2. | வார்டு எண். 13 முதல் 18 வரை இந்தியன் மார்க் ஐஐ கைபம்பு அமைத்தல் பணி | 10.00 | ஸ்ரீபாலமுருகள் போர்வெல்ஸ்<br>ஜே.சோபன் பாபு | 0.10% குறைவு<br>1.50% அதிகம் |
| 3. | வார்டு எண். 5 மற்றும் 7ல் சிறுமின் விசை பம்புடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 5.00 | ஸ்ரீபாலமுருகள் போர்வெல்ஸ்<br>ஜே.சோபன் பாபு | 0.05% குறைவு<br>1.20 % அதிகம் |
| 4. | நகராட்சி பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறுகள் அலசுதல் பணி | 7.00 | ராஜலட்சுமி காண்ட்ராக்ஸ்<br>எஸ்விபி எலக்ட்ரிகல்ஸ் | 0.15 % குறைவு<br>1.35 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | பூந்தண்டலம் விவசாய கிணற்றில் இருந்து நகராட்சி லாரி மூலம் குடிநீர் எடுத்தல் பணி | 7.00 | எம்.நித்தியானந்தம்<br>ஜி.சுரேஷ் | குறைவு<br>அதிகம் |
| 6. | நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் செய்ய பி.வி.சி சின்டெக்ஸ் குடிநீர் தொட்டிகள் அமைத்தல் பணி | 2.20 | லஷ்மி எண்டர்பிரைசஸ்<br>மகாலட்சுமி எலக்ட்ரிகல்ஸ் | 0.10% குறைவு<br>1.15% அதிகம் |
| 7. | நகராட்சி பகுதியில் 5 எண்ணம் இந்தியன் மார்க் ஐஐ கைபம்புகளை மாற்றி சிறுமின் விசை பம்புகள் அமைத்தல் பணி | 6.00 | வி.குணாளன்<br>டி.கே.இண்டஸ்டிரியல் | 0.15% குறைவு<br>1.55% அதிகம் |
| 8. | அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள தரைமட்ட நீர் தேக்க தொட்டிக்கு தனியார் லாரி மூலம் குடிநீர் சப்ளை செய்தல் பணி | 15.30 | எம்.ஆஷா<br>ஒரு கிலோ லிட்டர் ரூ.170/–<br>ஏ.சுசீலா<br>ஒரு கிலோ லிட்டர் ரூ.190/– | குறைவு<br>அதிகம் |
| 9. | அனகாபுத்தூர் நகராட்சி காமராஜபுரம் தரைமட்ட நீர் தேக்க தொட்டிக்கு தனியார் லாரி மூலம் குடிநீர் சப்ளை செய்தல் பணி | 15.30 | எம்.ஆஷா<br>ஒரு கிலோ லிட்டர் ரூ.170/–<br>ஏ.சுசீலா<br>ஒரு கிலோ லிட்டர் ரூ.190/– | குறைவு<br>அதிகம் |

அலுவலகக்குறிப்பு : மேற்கண்ட நிர்வாக அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றம் பார்வையிட்டு அனுமதியளிக்கலாம்.
3. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
4. குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

பொருள் எண்.6

அனகாபுத்தூர் நகராட்சியில் 2018–19ம் ஆண்டு மாநில பேரிடர் நிவாரணப் பணிகளை சமாளிக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியர் ஆய்வு கூட்டத்தில் வழங்கிய அறிவுரைகளை பின்பற்றி ஜீலை 2018ம் ஆண்டு ரூ.155.00 இலட்சத்திற்கு கீழ்க்கண்ட விவரப்படி பிரேரனை அனுப்பப்பட்டது. அதன் விவரம் வருமாறு,

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ஆழ்துளை கிணற்றுடன் கூடிய கை பம்பு அமைத்தல் பணி | 20.00 |
| 2. | பம்ப் செட்டின் கூடிய புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 15.00 |
| 3. | நகராட்சி பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளை அலசி சுத்தம் செய்தல் பணி | 7.00 |
| 4. | தனியார் லாரி மூலம் குடிநீர் சப்ளை செய்தல் பணி | 70.00 |
| 5. | விவசாய கிணற்றிலிருந்து குடிநீர் வாங்குதல் பணி | 10.00 |

| | | |
|---|---|---|
| 6. | தற்காலிக சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் பணி | 12.00 |
| 7. | நகராட்சி பகுதிகளில் உள்ள கை பம்பு மற்றும் பவர் பம்ப் பழுது பார்த்து பராமரித்திட தேவையான உதிரிபாகங்கள் வாங்குதல் பணி | 15.00 |
| 8. | ஆழ்துளை கிணற்றுடன் கூடிய கை பம்பினை மாற்றி மோட்டார் அமைத்தல் பணி | 6.00 |

மேற்படி பிரேரனைக்கு உரிய ஒப்புதல் மற்றும் நிர்வாக அனுமதி வழங்குவதற்கு காலதாமதம் ஏற்படுவதினால் குடிநீர் அவசர அவசியம் மற்றும் கோடை சமாளிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பணிகள் நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளப்பட்டது. அதன் விவரம்,

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அனகாபுத்தூர் நகராட்க்குட்பட்ட வார்டு எண்.2, 7 மற்றும் 13ல் 4 எண்ணம் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின் விசை மோட்டார் அமைத்தல் பணி | 10.00 |
| 2. | நகராட்சி பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணற்றினை அலசி சுத்தம் செய்தல் பணி | 2.00 |
| 3. | அனகாபுத்தூர் நகராட்சிக்கு தனியார் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி | 39.20 |
| 4. | நகராட்சி குடிநீர் லாரிக்கு விவசாய கிணற்றிலிருந்து குடிநீர் சப்ளை செய்தல் பணி | 3.00 |
| 5. | நகராட்சி பகுதிகளில் உள்ள 140 எண்ணிக்கையிலான கைப்பம்பினை பழுது பார்த்து பராமரித்திட தேவையான உரிதி பாகங்கள் அரசு அங்கீகாரம் பெற்ற டான்சி நிறுவனத்தில் கொள்முதல் செய்தல் பணி | 15.00 |
| 6. | தற்காலிக சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் பணி | 9.80 |

தற்போது மாநில பேரிடர் நிவாண நிதி 2019 திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டதினை தொடர்ந்து பொது நிதியில் செலவிடப்பட்ட தொகையினை திட்ட நிதியில் ஈடு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.7</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் நடைபெறும் ஆடி மாத திருவிழா காலத்தில் சாலை மற்றும் கோயில் பகுதிகளில் போக்குவரத்து செல்ல ஏதுவாக மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் பணி | 2.50 |
| 2. | அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் எதிர்வரும் பருவ மழையினை எதிர்நோக்கி வடிகால், சிறுபாலம் தூர்வாரி அப்புறப்படுதத்துல் பணி | 5.00 |
| 3. | அயோத்தியம்மன் கோயில் தெரு மற்றும் லேபர் பள்ளி தெருவில் சிறுபாலம் அமைத்தல் பணி | 2.00 |
| 4. | அனகாபுத்தூர் நகராட்சி காமராஜர் சாலை மற்றும் ஜே.என். சாலையில் | 4.00 |

| | | |
|---|---|---|
| | பி.வி.சி பைப்லைன் அமைத்தல் பணி | |

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.8</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அனகாபுத்தூர் நகராட்சி வார்டு எண்.1 முதல் 9 வரை மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்தல் பணி | 2.50 |
| 2. | அனகாபுத்தூர் நகராட்சி வார்டு எண்.10 முதல் 18 வரை மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்தல் பணி | 2.50 |
| 3. | வார்டு எண்.16 அன்னை மேரி 3வது தெருவில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | 2.00 |
| 4. | நகராட்சி குடிநீர் வாகனம் டிஎன் 22 ஏபி 4255 பழுது பார்த்து பணி மேற்கொண்டு தகுதி சான்று பெறுதல் பணி | 2.50 |

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.9</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நகராட்சி அலுவலக மேற்கூரையில் பொது சுகாதார பிரிவு பொருட்களை வைப்பதற்கு அறை அமைத்தல் பணி | 5.00 |
| 2. | கஸ்தூரிபாய் நகர் மயானத்தில் உள்ள Onsite Compost Centre–ஐ சுற்றி கிரில் கேட் (Weld Mesh) அமைத்தல் மற்றும் சாலைப்பகுதியில் பேட்ச் ஒர்க் செய்தல் பணி | 5.00 |

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.10</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட லட்சுமி நகர் மற்றும் சீனிவாசபுரம் பகுதிகள் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மனையாகும். மேற்கண்ட பகுதிகளில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டு வரப்பெற்ற மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | லட்சுமி நகர் பகுதியில் 6.00 மீட்டர் உயரம் கொண்ட மின் கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்தல் பணி | 9.50 |
| 2. | சீனிவாசபுரம் பகுதியில் 6.00 மீட்டர் உயரம் கொண்ட மின் கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள | 9.50 |

| | | |
|---|---|---|
| | தெருவிளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றுதல் பணி | |
| 3. | சீனிவாசபுரம் விரிவு பகுதியில் 6.00 மீட்டர் உயரம் கொண்ட மின் கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள தெருவிளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றுதல் பணி | 9.50 |

**<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.**

2.மேற்கண்ட பணி சென்னை பெருநகர வளர்ச்சி குழும மான்யத்திட்டத்தில் அல்லது பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.11</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட லட்சுமி நகர் மற்றும் சீனிவாசபுரம் பகுதிகள் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மனையாகும். மேற்கண்ட பகுதிகளில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டு வரப்பெற்ற மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | லஷ்மி நகர் பூங்கா செல்லும் முன் பகுதியில் சர்வீஸ் சாலை இணைப்பு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 8.80 |
| 2. | லஷ்மி நகர் முதல் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 8.20 |
| 3. | லஷ்மி நகர் 30 அடி சாலையில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 9.80 |
| 4. | லஷ்மி நகர் 30 அடி சாலை பூங்கா பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 10.00 |
| 5. | லஷ்மி நகர் இரண்டாவது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 7.50 |
| 6. | லஷ்மி நகர் பூங்கா முதல் அடையாறு ஆறு சாலையில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 7.50 |
| 7. | லஷ்மி நகர் நான்காவது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 9.90 |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**:மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.மேற்கண்ட பணி சென்னை பெருநகர வளர்ச்சி குழும மான்யத்திட்டத்தில் அல்லது பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.12</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பஜார் தெருவில் புதியதாக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டு முடிவடைந்துள்ளது. மேற்படி கட்டிடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு ஏற்கனவே இந்நகர் மன்ற தீர்மான எண்.380 நாள்.31.07.2018ல் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் திருத்தம் மேற்கொள்ளுதல் பணிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விவரம் | வைப்புத் தொகை | வாடகை கட்டணம் | குடிநீர் கட்டணம் | மின்சார கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1. | திருமணம் (திருமணத்திற்கு முந்தைய நாள் பிற்பகல் 2.00 மணி முதல் திருமண நாள் பிற்பகல் 2.00 மணி வரை) | 5,000/– | 10,000/– | 1,000/– | ஒரு யூனிடிற்கு ரூ.13.00/– |
| 2. | திருமண வரவேற்பு, பிறந்த | 5,000/– | 7,500/– | 750/– | ஒரு யூனிடிற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் விழா, காதணி விழா மற்றும் மஞ்சள் நீராட்டு விழா (காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை) | | | | ரூ.13.00/– |

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.நிகழ்ச்சி நடைபெறாத பட்சத்தில் பயனீட்டாளர் செலுத்திய வாடகை கட்டணம் திரும்ப வழங்கப்பட மாட்டாது என தெரிவிக்கலாம்.
3.மின் கட்டணம், குடிநீர் கட்டணம் மற்றும் மண்டபத்திற்கு சேதம் ஏற்பட்டால் அதற்குண்டான தொகையினை பிடித்தம் செய்யப்பட்டு மீதமுள்ள தொகையினை திரும்ப வழங்கலாம்.
4.நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மட்டும் வாடகை கட்டணம் மற்றும் வைப்புத் தொகையில் 50 சதவீதம் மட்டும் செலுத்த மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண். 13**

அனகாபுத்தூர் நகராட்சிக்கு பிஎஸ்என்எல் நிறுவனத்தின் மூலம் VPN சர்வீ வழங்கியதற்கானகட்டணத் தொகை 1.7.2018 முதல் 31.3.2019 வரைக்கான ரூ.110511/- மற்றும் ஜி.எஸ்.டி. தொகை ரூ.19892/- சேர்த்து மொத்த தொகை ரூ.130403/-ஐ (Accounts Officer (cash) O/o CGM BSNL Tn Circle chennai 600 002 என்ற பெயரில் வங்கி வரைவோலையாக செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :_** மன்றம் அனுமதியளிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண். 14**

அனகாபுத்தூர் நகராட்சிக்கு பிஎஸ்என்எல் நிறுவனத்தின் மூலம் VPN சர்வீஸ் வழங்கியதற்கானகட்டணத் தொகை 1.7.2018 முதல் 31.3.2019 வரைக்கான ரூ.144886/-ல், ரூ.130403/-ஐ (Accounts Officer (cash) O/o CGM BSNL Tn Circle chennai 600 002 என்ற பெயரில் செலுத்தப்பட்டது. மீதத்தொகை ரூ.14483/- செலுத்த கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு மண்டலம் அவர்களிடமிருந்து மின்னஞ்சல் வரப்பெற்றது. மேற்கண்ட தொகை ரூ.14483/- வங்கி வரைவோலையாக (Accounts Officer (cash) O/o CGM BSNL Tn Circle chennai 600 002 என்ற பெயரில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :_** மன்றம் அனுமதியளிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண். 15**

இந்நகராட்சி 2018-2019ம் ஆண்டு கணக்குகள் தணிக்கை செய்யும் பணி 29.5.2018ல் உள்ளாட்சி நிதித்திதணிக்கை துறையால் துவங்கப்பட்டதின்பேரில் தணிக்கை ஆண்டுக்கான வருவாய் மற்றும் செலவு கணக்கு தயாரித்தல் 31.03.2019 நிலையில் ஐந்தொகை குறிப்புகள் தயாரித்தல், நகராட்சியின்

நிரந்தர சொத்துகளுக்கு மதிப்பீடு செய்தல், நகராட்சி கணக்கு நடைமுறை நூலில் விவரிக்கப்பட்ட துவக்க ஐந்தொகை குறிப்பு தயாரிக்க அனைத்து அட்டவணைகள் தயாரித்தல், பொதுபேரேடு தயாரித்தல் ஆகிய பணிகள் தனியார் கலந்தாய்வர் மூலம் மேற்கொள்ள விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரபெற்ற விலைபுள்ளிளை கூட்டத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஜி. சாப்ட் சிஸ்டம்ஸ்<br>2/1, ஜோதி நகர் பிரதான சாலை<br>ஈக்காட்டு தாங்கல் சென்னை -32 | ரூ.90000.00 |
| 2 | கர்சர் சொலுசன்ஸ்<br>30/4, எல்லியம்மன் கோவில் தெரு<br>அடையாறு சென்னை - 30 | ரூ.90500.00 |
| 3 | ஆனந்த் எண்டர்பிரைசஸ்<br>4, வேல் நகர் 4வது பிரதான சாலை<br>தாம்பரம் சென்னை -35 | ரூ.92000.00 |

அலுவலக குறிப்பு : 1. மேற்படி வரப்பெற்ற குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. 2018–2019ம் ஆண்டு கணக்குகள் முடித்து அறிக்கை தயார் செய்ய வேண்டியுள்ளதால் மேற்படி நிறுவனத்தின் குறைந்த விலைபுள்ளியை ஏற்று, பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 16**

இந்நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஊதியத்தில் 2018–19ம் ஆண்டு பிடித்தம் செய்த வருங்கால சேமநல வைப்பு நிதி தொகைக்கு வட்டி விகிதம் கணக்கீடு செய்து இயக்குநர் உள்ளாட்சி நிதித் துறை அலுவலகத்திற்கு அனுப்பி ஒப்புதல் பெற வேண்டியுள்ளதால், தனியார் கலந்தாய்வர் மூலம் மேற்கொள்ள விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரபெற்ற விலைபுள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ராஜ்ரேவ் சாப்ட் சிஸ்டம்ஸ்<br>2, முத்தியாள் ரெட்டி நகர் 3வது தெரு<br>ஆதம்பாக்கம் சென்னை -88 | ரூ.70525.00 |
| 2 | என் டெக் சொலுசன்ஸ்<br>10, கௌதமர் தெரு<br>கிழக்கு தாம்பரம் சென்னை - 59 | ரூ.73612.00 |
| 3 | வென்கட் இவன்ட்<br>13, வேல் நகர் விரிவு<br>ஆதம்பாக்கம் சென்னை - 88 | ரூ.76682.00 |

**அலுவலக குறிப்பு :_** மேற்படி வரப்பெற்ற குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்..

**பொருள் எண். 17**

மாவட்ட ஆட்சித்தலைவர் காஞ்சிபுரம் அவர்களின் ஆய்வு கூட்ட நாள்.12..06.2019 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கற்பட்டு அவர்களின் ஆய்வு கூட்ட நாள் 14.06.2019 தேதியின் அறிவுரைகளின்படி அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளில் உள்ள

வீடுகளுக்கு குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துவது குறித்து விழப்புணர்வு ஏற்படுத்தவும் மற்றும் மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துவது குறித்து மாதரி படங்கள் அடங்கிய மல்டி கலர் ஸ்டிக்கர் நகர் பகுதியில் உள்ள வீடுகளில் ஒட்டுவதற்கு ( Multi colour Sticker ) அச்சடிக்கும் பணி மேற்கொள்ள தோராய மதிப்பு செலவினம் ரூ.4.50 இலட்சத்திற்கு பொது நிதியில் மேற்கொள்ள நகர மன்றத்தின் அனுமதிக்கும் . மேற்படி பணியை ஒப்பந்தப்புள்ளி கோரி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** தற்போது நிலவி வரும் குடிநீர் பற்றாக்குறை அவசியம் கருதி மழைநீர் சேமிப்பு முக்கியத்துவம் கருத்தில் கொண்டு குறுகிய காலப் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்,
அனகாபுத்தூர் நகராட்சி.